# துணைத் தூதர் கிறிஸ் ஹோட்ஜஸ்



சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகத்தின் முதன்மை அதிகாரியாக துணைத் தூதர் கிறிஸ்டோபர் டபிள்யூ ஹோட்ஜஸ் ஜூலை 31, 2023 அன்று பொறுப்பேற்றார்.

இதற்கு முன்னதாக, அண்டை கிழக்கு விவகாரங்களுக்கான பணியகத்தில் பத்திரிகை, பொது உறவு நயம் மற்றும் உதவி ஒருங்கிணைப்புக்கான உதவி செயலாளராகவும், இஸ்ரேல்-பாலஸ்தீன் விவகாரங்களுக்கான துணை உதவி செயலாளராகவும் பணிபுரிந்தார். 2000ல் வெளியுறவு சேவையில் இணைந்த அவர், ஜெருசலேம், ஹனோய், வியட்நாம்; மற்றும் அக்ரா, கானாவில் பொது உறவு நய அதிகாரியாக பணியாற்றி உள்ளார். அத்துடன் மத்திய ஐரோப்பிய விவகாரங்களுக்கான அலுவலகத்தில் ஆஸ்திரியா, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து மற்றும் லிச்சென்ஸ்டைன் ஆகிய நாடுகளுக்கான துணை இயக்குநராகவும் இருந்திருக்கிறார்.

ஜார்ஜியா டெக்கில் சர்வதேச விவகாரங்களுக்கான மதிப்புறு இளநிலை பட்டம், ஜார்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் சர்வதேச விவகாரங்களுக்கான முதுநிலை பட்டம், அமெரிக்க கடற்படைப் போர்க் கல்லூரியில் மூலோபாய ஆய்வுகளில் முதுநிலை பட்டம்

உள்ளிட்டவற்றை கிறிஸ் பெற்றுள்ளார். 2018ம் ஆண்டுக்கான பொது உறவு நயத்திற்கான எட்வர்ட் ஆர். முர்ரோ விருதில் இரண்டாம் இடத்தை அவர் பிடித்தார், மேலும் 2019ம் ஆண்டில் பொது உறவு நயத்தில் சாதனை படைத்ததற்காக பொது உறவு நய முன்னாள் மாணவர் சங்கத்தால் கௌரவிக்கப்பட்டார். ஜார்ஜியாவின் மரியட்டாவைப் பூர்வீகமாகக் கொண்ட அவருக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

சென்னையில் உள்ள துணைத் தூதராக, தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களிலும் அந்தமான்-நிக்கோபார், லட்சத்தீவுகள், மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட யூனியன் பிரதேசங்களிலும் அமெரிக்க இந்திய உறவுகளை மேம்படுத்துவதற்கு கிறிஸ் பொறுப்பாவார்.

***